**DP/OL/2025**

எனது எண்: 6/4/OL/2025(2026)
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை, பத்தரமுல்ல.
2025 செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி

சகல அதிபர்களுக்கும்,

## கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சா.தர)ப் பரீட்சை – 2025(2026)

க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை – 2025 இற்குத் தோற்றவுள்ள பாடசாலை விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தற் பத்திரம் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது. விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலை முறைமையூடாக 2025 செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் மாதம் 09 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**அரச பாடசாலையில் கற்றுக்கொண்டே தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தோற்றுவது கண்டறியப்படின் பரீட்சைப் பெறுபேறு இரத்துச் செய்யப்படுவதுடன் எதிர்காலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதும் தடைசெய்யப்படும்.**

### 01. பரீட்சைக்கு விண்ணப்பித்தல்

நிகழ்நிலை முறைமையில் (Online) மட்டுமே விண்ணப்பப்படிவங்களை விண்ணப்பிக்க வேண்டும். அதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின்,

- "https://doenets.lk" எனும் உத்தியோக பூர்வ இணையத்தளத்தினுள் நுழைந்து "எமது சேவை" இன் கீழுள்ள "Exam Information Centre" என்பதை (Click) செய்தோ அல்லது
- http://onlineexams.gov.lk/eic இற்குள் நுழைக.
- உங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள பயனர் பெயர் (User name) மற்றும் கடவுச்சொல் (Password) என்பனவற்றை பயன்படுத்தி நிகழ்நிலை முறைமைக்குள் நுழைக.

### 02. பாடமும் மொழிமூலமும்

முதற்தடவையாக தோற்றவுள்ள விண்ணப்பதாரி 9 பாடங்களையும் கட்டாயமாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், மொழிமூலம், பாடங்கள், பாட எண்கள் என்பனவற்றை சரியாகப் பூர்த்தி செய்வது அதிபரினதும் பொறுப்பாசிரியரினதும் பொறுப்பாகும் என்பதை தயவுடன் கவனத்திற் கொள்க.

### 03. நிலையம்

கடந்த முறை தங்கள் பாடசாலை மாணவர்கள் தோற்றிய பாடசாலையை விட வசதியான பரீட்சை நிலையமொன்று நகரமொன்றில் இருப்பின் அதனை மாற்றஞ் செய்து தருமாறு உரிய வலயக் கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்து அதன் பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்க.

### 04. விண்ணப்பதாரிகளின் பெயர்

விண்ணப்பதாரிகளின் பெயர் அவர்களது **பிறப்புச்சான்றிதழில்** உள்ளவாறு முழுப்பெயருடன் குறிப்பிடல் வேண்டும். குடும்பப் பெயர் உள்ளடக்கப்படாத பெயர் எனில் அதற்காக பெற்றோரிடம் கடிதமொன்றைப் பெற்று தங்கள் வசம் வைத்துக் கொள்ளவும். விண்ணப்பதாரிகளின் **பெயர்களில் எழுத்துப் பிழைகள் அல்லது பெயர் ஒழுங்கில்** பிழைகள் தொடர்பாக அதிக கவனஞ் செலுத்துக.

இடைவெளிகளுடன் சேர்த்து தொண்ணூறு (90) எழுத்துக்கள் மாத்திரமே உள்ளடக்க முடியுமென்பதுடன் தொண்ணூறு (90) எழுத்துக்களுக்கும் அதிகமாயின் பெயரின் முதலாவது பகுதி (தேவையான இரண்டாம் மூன்றாம் பகுதியை) முதலெழுத்துக்களுடன் இடவும்.

EX: JEBAMALAI SELESTHIDE ANTON LISANDRO DEROSE MAKLEN VILLAVARAYAN JOSEPH ROSARY JAINS

**05. தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரிகளுக்காக விசேட தனித்துவமான எண்களை உருவாக்கல்**

இப்பரீட்சைக்கு நிகழ்நிலை முறைமையில் தரவுகள் உள்ளடக்கப்படும் போது தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரிகளுக்கு தங்களால் விசேட தனித்துவ அடையாள இலக்கமொன்று (special unique code) வழங்கப்பட வேண்டும். அது 12 இலக்கங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் கீழே காட்டப்பட்டுள்ளவாறு உருவாக்கப்படல் வேண்டும்.

பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பாடசாலை எண் மற்றும் விண்ணப்பப்படிவத்தின் தொடர் இலக்கம் உள்ளடங்கலாக 12 இலக்கங்களைக் கொண்ட விசேட அடையாள இலக்கத்தை உருவாக்கிக் கொள்க. (கீழே தரப்பட்டுள்ள உதாரணத்திற்கமைவாக)

உ.தா: 1. விண்ணப்பதாரியின் பிறந்த ஆண்டு, பாடசாலை எண் 6259, விண்ணப்பப்படிவத்தின் தொடர் எண் 1 எனின்
விசேட அடையாள இலக்கம் : **200962590001** ஆக இருத்தல் வேண்டும்.

2. விண்ணப்பதாரியின் பிறந்த ஆண்டு, பாடசாலை எண் 28509, விண்ணப்பப்படிவத்தின் தொடர் எண் 360 எனின்
விசேட அடையாள இலக்கம் : **200928509360** ஆக இருத்தல் வேண்டும்.

**06. பாடமும் பாட எண்ணும்**

கல்வி அமைச்சின் இலக்கம் 2006/09, 2007/06, 2007 மார்ச் மாதம் 07ஆம் திகதி சுற்றறிக்கைக்கமைவாக 06 கட்டாய பாடங்களும், முதலாம், இரண்டாம், மூன்றாம் பாடத்தொகுதிகளிலிருந்து ஒரு பாடம் வீதமுமாக ஆகக்கூடியது 09 பாடங்களுக்குத் தோற்ற முடியும்.

| பாட எண் | பாடம் |
|---|---|
| (11) முதல் (16) வரை | சமயம் |
| (21) | சிங்கள மொழியும் இலக்கியமும் |
| (22) | தமிழ் மொழியும் இலக்கியமும் |
| (31) | ஆங்கில மொழி |
| (32) | கணிதம் |
| (33) | வரலாறு |
| (34) | விஞ்ஞானம் |
| (60) முதல் (75) வரை | முதலாம் பாடத்தொகுதி |
| (40) முதல் (52) வரை | இரண்டாம் பாடத்தொகுதி |
| (80) முதல் (94) வரை | மூன்றாம் பாடத்தொகுதி |

**07. ஆங்கில மொழிமூலத்தில் தோற்றுதல்**

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் தவிர்ந்த ஏனைய பாடங்களுக்கு விண்ணப்பதாரிகளின் விருப்பினடிப்படையில் ஆங்கில மொழிமூலமோ தாய் மொழிமூலமோ தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

- 40 - சங்கீதம் (கீழைத்தேய)
- 42 - சங்கீதம் (கர்நாடகம்)
- 44 - நடனம் (சுதேச)
- 45 - நடனம் (பரதம்)

## 08. பரீட்சைக் கட்டணம்

அரச பாடசாலைகளில், கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலைகளில், அங்கீகரிக்கப்பட்ட பிரிவெனாக்களில் இப்பரீட்சைக்கு முதலாம், இரண்டாம் தடவை பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் கட்டணம் செலுத்துவதிலிருந்து - விடுவிக்கப்படுவர். அவர்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கும் போது **''Free''** எனக் குறிப்பிடுக.

மூன்றாம் தடவை தோற்றும் விண்ணப்பதாரிகள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு பரீட்சைக் கட்டணத்தை செலுத்த வேண்டும்.

| பாடங்களின் எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 - 9 |
|---|---|---|---|---|---|---|
| கட்டணம் | 100/= | 150/= | 200/= | 250/= | 300/= | 350/= |

இப் பரீட்சைக் கட்டணங்களை சகல விண்ணப்பதாரிகளிடமிருந்து பெற்றுக் கொண்டு ஒரே தடவையில் கீழே தரப்பட்டுள்ள கணக்கில் வைப்புச் செய்து அதன் பற்றுச்சீட்டை பதிவுத்தபாலில் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவும்.

கொடுப்பனவைப் பெறுபவர் - பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்
வங்கி, கிளை - இலங்கை வங்கி, பெலவத்தை
கணக்கு இலக்கம் - 7041229

## 09. தரவிறக்கம் செய்தல்

தரவிறக்கம் செய்த பின்னர் அச்சுப் பிரதியெடுத்த விண்ணப்பப்படிவத்தில் **முழுப்பெயர், விண்ணப்பிக்கும் பாடம் (விசேடமாக தொகுதிப் பாடங்கள் தொடர்பாக), மொழிமூலம்** மற்றும் அதிலுள்ள சகல விபரங்களும் சரியானவை என உறுதிசெய்து கையொப்பம் பெற்றுக் கொள்வதுடன் அவசியமேற்படுமிடத்து பரீட்சைத் திணைக்களத்துக்கு சமர்ப்பிப்பதற்காக பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும். நிகழ்நிலை முறைமைக்குள் தரவுகளை உள்ளிட்ட **பின்னர்** தரவிறக்கம் செய்யப்பட்ட PDF பிரதியையும் உங்களால் தயாரிக்கப்பட்ட Excel கோப்பினையும் ஒப்பிட்டுப் பார்த்து சகல விண்ணப்பதாரிகளினதும் சகல விவரங்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்வது அதிபர்களினதும் பொறுப்பாசிரியரினதும் முழுப்பொறுப்பாகும்.

## 10. விசேட தேவைகளுடைய விண்ணப்பதாரிகள்

உங்களுடைய பாடசாலையிலிருந்து பார்வைக் குறைபாடு/ செவிப்புலன் குறைபாடு அல்லது வேறு விசேட தேவைகளுடைய விண்ணப்பதாரிகள் இருப்பின் அவர்களுக்காக ''Additional data of applicants with special education needs'' இல் go to data form என்பதை click செய்து அங்கு கேட்கப்பட்டுள்ள விவரங்களைப் பூரணப்படுத்துதல் வேண்டும். விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படுமாதலால் அப்பரீட்சை நிலையங்களில் எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகள் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தவும்.

- பார்வையற்றோர் பாடசாலை, இரத்மலானை
- செவிப்புலனற்றோர் பாடசாலை, இரத்மலானை
- பார்வையற்றோர்/ செவிப்புலனற்றோர் பாடசாலை பொலம்மாறுவ, தங்காலை
- சிவிராஜ் பார்வையற்றோர் பாடசாலை, மகாவெவ
- ரோகண - பார்வையற்றோர்/ செவிப்புலனற்றோர் பாடசாலை, வல்கம, மாத்தறை ஆகிய பாடசாலைகள்

11. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**

இப்பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் தத்தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்குத் தோற்றும் போதும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக **செல்லுபடியாகும் கடவுச்சீட்டு** அல்லது **செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்** மாத்திரமே பயன்படுத்த முடியும். வேறு எந்த அடையாள அட்டையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. **ஆகையால் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு பரீட்சைக்கு முன்னர் அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது பாடசாலை அதிபரின் பொறுப்பாகும்.**

12. **விசாரணை**

இப்பரீட்சைக்கு நிகழ்நிலை (Online) முறைமையில் தரவுகளை உள்ளடக்குதல் தொடர்பாக ஏதேனும் தெளிவுபடுத்த வேண்டியிருப்பின் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கோ மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது தொலைபேசி எண்களுக்கோ தொடர்பு கொள்ளவும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பும் பெறுபேறும்
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
த.பெ.இல 1503, கொழும்பு

மின்னஞ்சல் முகவரி : gceolexamsl@gmail.com

தொலைபேசி இலக்கம் : 011-2784208, 011-2784537, 0112785922
தொலைநகல் இலக்கம் : 011-2784922
நிகழ்நிலை அலகு : 011-3661122/0115671558



ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்